**கவனிக்க.-** *2022.02.11 ஆந் திகதிய 2267 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2268 - 2022 පෙබරවාරි මස 18 වැනි සිකුරාදා - 2022.02.18

*2268 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 331 |


**கவனிக்க.-** (i) புலமைச் சொத்து (திருத்தம்) சட்டமூலம் 2022, பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2022, பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2022, மாச்சு மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


331- B82318 - 5403 (2022/02)

# நானாவித அறிவித்தல்கள்

கண்டி மாநகர சபை

கண்டி மாநகர சபைக்கு சொந்தமான நகர வாகன தரிப்பிடத்தில் வாகனங்கள் நிறுத்துவதற்கான திருத்தப்பட்ட கட்டணமானது 2022, சனவரி மாதம் தொடக்கம் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு அறவிடுவதற்கு கண்டி மாநகர சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறியத் தருகின்றோம்.

**1. தினக் கூலி அடிப்படை**

2021.12.29 ஆந் திகதியிலான 8(99) இலக்கமிடப்பட்ட கூட்டத்தின் தீர்மானத்தின் படி 2022.01.01 ஆந் திகதி தொடக்கம் மாற்றமடைந்துள்ள, கண்டி மாநகர சபைக்கு சொந்தமான வாகன தரிப்பிடத்தில் தினந்தோறும் நிறுத்தி வைக்கப்படுகின்ற மோட்டார் சைக்கிள், கார், முச்சக்கர வண்டி, ஜீப் வண்டி, வேன் வண்டிகள் மற்றும் சிறிய லொறிகள் போன்றவற்றின் கால எல்லையை அடிப்படையாகக் கொண்டு வரி உள்ளடங்கலாக தற்போது அறவிடப்படுகின்ற கட்டணங்கள் மாற்றமடைந்துள்ள கட்டணங்கள் போன்றன கீழே காட்டப்பட்டுள்ளன.

| | காலம் | தற்போது அறவிடப்படுகின்ற கட்டணம் | மாற்றமடைந்துள்ள கட்டணம் |
|---|---|---|---|
| 01 | 00.00 தொடக்கம் 1.00 மணித்தியாலம் வரை | 50.00 | 60.00 |
| 02 | 00.00 தொடக்கம் 2.00 மணித்தியாலம் வரை | 70.00 | 80.00 |
| 03 | 00.00 தொடக்கம் 3.00 மணித்தியாலம் வரை | 80.00 | 100.00 |
| 04 | 00.00 தொடக்கம் 4.00 மணித்தியாலம் வரை | 100.00 | 120.00 |
| 05 | 00.00 தொடக்கம் 5.00 மணித்தியாலம் வரை | 120.00 | 140.00 |
| 06 | 00.00 தொடக்கம் 6.00 மணித்தியாலம் வரை | 140.00 | 160.00 |
| 07 | 00.00 தொடக்கம் 7.00 மணித்தியாலம் வரை | 160.00 | 180.00 |
| 08 | 00.00 தொடக்கம் 8.00 மணித்தியாலம் வரை | 200.00 | 220.00 |
| 09 | 00.00 தொடக்கம் 9.00 மணித்தியாலம் வரை | 300.00 | 320.00 |
| 10 | 00.00 தொடக்கம் 24.00 மணித்தியாலம் வரை | 350.00 | 400.00 |

**2 முற்பணமாக கட்டணம் அறவிடல்**

| | தொகுப்பு | தற்போது அறவிடப்படுகின்ற கட்டணம் (VAT /முத்திரைக் கட்டணம் தவிர்ந்த) | மாற்றமடைந்துள்ள கட்டணம் (VAT / முத்திரைக் கட்டணம் தவிர்ந்த) | காலம் |
|---|---|---|---|---|
| 01 | பாடசாலை வேன் வண்டிகளுக்காக (பாடசாலை சேவை சங்கங்களில் பதியப்பட்ட) | 1200.00 | 1500.00 | மு.ப 6.00 - பி.ப 3.00 |
| 02 | வர்த்தக சங்கங்களின் உரிமையாளர்களுக்காக | 4000.00 | 4500.00 | மு.ப 6.00 -பி.ப 9.00 |
| 03 | வர்த்தக சங்கங்களின் சேவையாளர்ளுக்காக | 4500.00 | 5000.00 | மு.ப 6.00 -பி.ப 9.00 |
| 04 | வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுக்காக | 4000.00 | 4500.00 | மு.ப 6.00 -பி.ப 9.00 |
| 05 | i. மோட்டார் சைக்கிள் தவிர்ந்த ஏனைய வாகனங்களுக்காக | 6500.00 | 7000.00 | 24 மணித்தியாலங்கள் |
| | ii. மோட்டார் சைக்கிள்களுக்காக | 1700.00 | 2000.00 | |
| 06 | i. மோட்டார் சைக்கிள் தவிர்ந்த ஏனைய வாகனங்களுக்காக | 3500.00 | 4500.00 | மு.ப 6.00 - அடுத்த நாள் பி.ப 8.00 |
| | ii. மோட்டார் வாகனங்களுக்காக | 1200.00 | 1500.00 | |
| 07 | மோட்டார் வாகனங்களுக்காக | 1200.00 | 1500.00 | மு.ப 8.00 -பி.ப 9.00 |

02-185